MINISTRY OF HEALTH
SINGAPORE

# இல்லத் தடைக்காப்பு ஆணை என்றால் என்ன?

- இல்லத் தடைக்காப்பில் உள்ள தனிநபர்கள்:
  - அறிகுறி ஏதுமின்றி நலமாக இருப்பவர்கள்
  - கிருமித்தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் தொடர்பு வைத்திருந்தவர்கள்
- அவர்கள் பின்வருபனவற்றைச் செய்யாதிருக்கவேண்டி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளார்கள்:
  - தடைக்காப்பிற்குரிய இடங்களை விட்டு வெளியேறக்கூடாது
  - பிற தனிநபர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது
- இல்லத் தடைக்காப்பில் உள்ள அனைத்து நபர்களுக்கும் அன்றாட அத்தியாவசியத் தேவைகளுக்கான ஆதரவு வழங்கப்படுகின்றது

## யார் நெருங்கிய மற்றும் நிலையற்ற தொடர்புகள் ஆவர்?

### நெருங்கிய தொடர்புகள்

**பின்வரும் நபர்களில் ஒருவர்**
- நோயாளிக்குப் பராமரிப்பு வழங்குபவர் (சுகாதாரப் பராமரிப்பு ஊழியர் அல்லது குடும்ப உறுப்பினர் உட்பட)
- அதே போன்று, உடல் ரீதியாக நெருக்கமான தொடர்பில் இருப்பவர்
- கிருமித்தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட நபர் இருக்கும் அதே இடத்தில் வசிப்பவர் (எ.கா. உடன் வாழ்தல், வருகை புரிதல்)

### நிலையற்ற தொடர்புகள்

நடைபாதையில், பொதுப் போக்குவரத்தில் அல்லது பொது இடங்களில், கிருமித்தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் சிறிதளவு நேரம் தொடர்பு வைத்திருந்த அனைவரும். நிலையற்ற தொடர்புகளிடமிருந்து கிருமித்தொற்று ஏற்படுவதற்கான அபாயம் குறைவு என மதிப்பிடப்பட்டுள்ளது.

- *நெருங்கிய தொடர்பில் இருந்த அனைவரின் சுகாதார நிலை, அவர்கள் நோயாளியுடன் கடைசியாகத் தொடர்பு வைத்திருந்த நாள் முதல் 14 நாட்களுக்கு அணுக்கமாகக் கண்காணிக்கப்படும்*
- *கிருமித்தொற்றுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்துபவர்கள், மேற்படி பரிசோதனைக்காக, சிறப்பு மருத்துவ வண்டி ஒன்றில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்*

## தொடர்ந்து, விழிப்புடன் இருக்கவும்; நல்ல தனிநபர் சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றவும்

உங்களது வீட்டை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வதற்கான வழிமுறைகளைத் தெரிந்துகொள்ள விரைவுத் தகவல் குறியீட்டை வருடவும். அண்மைத் தகவல்களுக்கு சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை நாடவும்: **www.moh.gov.sg**

GO.gov.sg